10/-

உ

சிவமயம்

# நடராஜப் பத்து



பதிப்பாளர்

க. இராசரத்தினம்

2ம் வட்டாரம்

அல்லைப்பிட்டி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடி முடியும்நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ
மண்டல மிரண்டேழுநீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க் குயிரும்நீ
பிறவும்நீ ஒருவநீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பெற்றதாய் தந்தைநீயே
பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ
போதிக்க வந்தகுருநீ
புகழொணா கிரகங்க ளொன்பதும் நீயிந்தப்
புவனங்கள் பெற்றவனும்நீ
எண்ணரிய ஜீவகோடிகளீன்ற வப்பனே
என்குறைகளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 1

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறைந்த பிரம்மனாட
கோனாட வானுலகு கூட்டமெல் லாமாட
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டைபுலி யுடையாட
குழந்தை முருகேசனாட
ஞானசம் பந்தரோடு யிந்திரர் பதினெட்டு
முனியட்ட பாலகருமாட
நரை தும்பை யருகாட நந்திவாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட யெனைநாடி யிதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலென்ற புவிமீதில் அலையொன்றவுரு கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற யிரைதேடி
ஓயாம லிரவுபகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபய னடைந்திலேனைத்
தடமென்றமிடி கரையில் பந்தபா சங்களெனும்
தாபரப் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று கேளா
திருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பு குனியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
மதுவல்ல சாலமல்ல
அம்புகுண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோ டிகளல்ல
அரியமோ கனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங்
கூறிடும் வயித்தியமல்ல
என்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
யேதுளவு புகலவரவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்து வந்தேனென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்தமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுக னறுமுகன் இருப்பிள்ளை யில்லையோ
தந்தைநீ மலடுதானோ
விந்தையும் ஜாலமும் உன்னிடம் மிருக்குதே
வினையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிதுவல்லவோ
யிந்தவுல கீரேழு மேனளித்தாய் சொல்லு
யினியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில் லாதபோதிலும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதிலும்
மொழியெகனை மொகனையில் லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமேகவரினும்
முழுகாமியே யாகினும்
பழியெனக் கல்லாவோ தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்கு பாதியுட லீந்தநீ
பாலனைக்காக் கொணாதோ
யெழில்பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவாகமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைதந் தைகளென்னை யீன்றதற் கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசைமூன்றுன் கழுவெனோ
முன்பிறப் பென்னவினை செய்தனென் றழுவனோ
என்மூடலறிவுக் கழுவனோ
முன்னிலென்வினை வந்து மூளுமென் றழுவனோ
முத்திவரு மென்றுணர்வனோ
தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்நழுவனோ
தவமென்னவென் றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க் கழுவனோ
தரித்திர திசைக்கழுவனோ
இன்னமென் னப்பிறவி வருமோவென் றழுவனோ
யெல்லாமுரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பறிகொண்டேனோ
கடனென்று பொருள் பறித்தே வறிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்த பொருளிலை யென்றனோ
தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ
வாயாரப் பொய் சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வானவரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரை சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபியென்றே பெயரெடுத் தேனோ
யெல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயா ரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீஷர்க ளிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை
ஒன்றைக் கண்டுதடுக்க
உதவுமோ யிதுவெலாம் சந்தையுற வென்றுதான்
உன்னிருபாதம் பிடித்தேன்
யார்மீது வுன்மன மிருந்தாலும் முன்கடைக்
கண்பார்வை யதுபோதும்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்பொ பெரும்பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
யிதுவுனக் கழகுதானோ
என்னன்னை மோகமோ யிதுவென்ன சோபமோ
இதுவோவுன் செய்கைதானோ
இருப்பிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான்விடுவனோ
உன்னைவிட் டெங்கு சென்றாலும் நிழலாவனோ
நான் உன்னை யடுத்துக் கெடுவனோ
ஓகோ விதுன்குற்ற மென்குற்ற மொன்றுமிலை
உற்றுப்பார் வெற்றவையா
என்குற்ற மாயினும் உன்குற்ற மாயினும்
மினியிருளளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருசந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபனி ரண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே
பணியொத்த நட்சத் திரங்களிரு பத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னால்
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்ரறயும் வெட்டிப்
பலரையும் அதட்டியென்முன்
கனிபோல வேபேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களையுங் கசக்கி
கர்த்தரின் தொண்டராம் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவை முனிசாமி
யெனையாள்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 11

NCK

# நியு கமல் செரமிக்ஸ்

எஸ்லோன் பைப், மாபிள்வகை, சீமெந்து, பெயின் வகைகள், இரும்புப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

T.P : 021- 2085
021- 2101

37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கங்கை பிறின்டேர்ஸ் (ஓவ்செற்) 166/1 நாவலர் றோட். யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org